# நீர்வைக் கந்தன் பிள்ளைத்தமிழ்





வெளியீடு:

இந்துசமய அபிவிருத்திச் சங்கம்

கந்தசுவாமி தேவஸ்தானம்

நீர்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நீர்வைக் கந்தன் பிள்ளைத்தமிழ்



நூலாசிரியர்:
நீர்வை தி. மயூரகிரி சர்மா

வெளியீடு:
இந்துசமய அபிவிருத்திச் சங்கம்
கந்தசுவாமி தேவஸ்தானம்
நீர்வேலி.

27.04.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நூல் – நீர்வைக் கந்தன் பிள்ளைத்தமிழ்
நூலாசிரியர் – நீர்வை தி. மயூரகிரி சர்மா
முதற் பதிப்பு – ஏப்ரல், 2010
வெளியீடு – இந்து சமய அபிவிருத்திச் சங்கம்,
கந்தசுவாமி தேவஸ்தானம்,
நீர்வேலி.
அச்சுப்பதிப்பு – ஷாம்பவி பதிப்பகம்
276, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை – நீர்வேலி.

*Book Title* - *"Neervai Kanthan Pillaithamiz"*
*(Devotional Songs of infant Skantha)*
*Authar* - *T. Mayoorakiri Sharma (Neervai)*
*Ist editon* - *April, 2010*
*Publish* - *Hindu religion development*
*Association*
*Skanthasuwami Devasthanam*
*Neervely.*
*Printers* - *Shampavi Printers,*
*276, Kasthuriyar Rood,*
*Jaffna.*
*Shampavi2009@gmail.com.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்



## சிவஸ்ரீ. சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள் அவர்கள்

நிர்வைக்கந்தன் திருத்தொண்டிற்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த

இராஜேந்திரக் குருக்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும்

இந்நூலினை அப்பெருங்குரவருக்கே சமர்ப்பணம்

செய்வதில் மனநிறைவெய்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுரவாயிலில்....

முருகன் அழகுத்தெய்வம். அவன் தமிழ்த் தெய்வம். அவன் செந்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் பிள்ளைப்பெருமான். செம்மொழிகள் என்று உலகம் போற்றும் சமஸ்கிருதமும் தமிழும் குமரனைப் போற்றித் துதிக்கின்றன. அதிலும் தமிழ் என்றால் முருகன். **முருகன் என்றால் தமிழ்.**

முருகனுக்கு பன்னிரு தோள்கள். தமிழில் உயிர் எழுத்துக்கள் **பன்னிரண்டு.** அவனுக்குப் **பதினெட்டுக்** கண்கள். தமிழில் மெய் யெழுத்துக்கள் பதினெட்டு. அவனுக்கு ஆறுதிருமுகங்கள் உண்டு. தமிழில் இன எழுத்துக்கள் **ஆறு.** முருகனுடைய ஒரே பேராயுதம் வேல். தமிழிலும் ஒரு ஆயுதவெழுத்து உண்டு.

ஆகவே தான் அருணகிரிநாதர் "செந்தில் வாழ் செந்தமிழ்ப் பெருமாளே" என்று பாடி மகிழ்கிறார். இன்று நாம் அவனை **"செம்மொழிப்பெருமான்"** என்று மட்டுமல்லாமல் **"செம்மொழிகளின் இறைவன்"** என்றும் அழைக்கலாம்.

ஆகவே முருகனில்லையேல் தமிழில்லை. சங்கத்தமிழ் நூல்களில் முதலாவதாக போற்றப்படுவதும் இன்றும் மக்கள் மத்தியில் பெரிதும் புழக்கத்தில் இருப்பதுமான சிறப்புப் பெற்றது நக்கீரர் பெருமான் அருளிச் செய்த **"திருமுருகாற்றுப்படை"** என்பதும் இவ்விடத்தில் மனங் கொள்ள வேண்டியது.

இவற்றால் முருகனை நமது இனத்துவேஷங்களுக்குள் உட்படுத்தி தமிழர்களுக்கு மட்டுமே சொந்தம் என்று கருதி விடக்கூடாது. நமக்குள் ஆரிய-திராவிட கட்டுக்கதையை புகுத்தி இந்துக்களை இரண்டாகப் பிரித்த சூழ்ச்சியாளர்களுக்கு இது துணையாகி விடும். உலகத்தின் பேரழகுத் தெய்வமான முருகன் **"கதிரகம தெய்யோ"** ஆகவும் கார்த்திகேயனாகவும் ஸ்கந்தனாகவும் இருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் "வள்ளிக்கு வாய்த்தவனே மயிலேறிய மாணிக்கமே" என்று கந்தரலங்காரம் போற்றுமாப் போல தமிழ் வேடுவப்பெண்ணான வள்ளியை திருமணம் செய்து கொண்டதால் முருகன் தமிழரின் கடம்பமாலை தரித்த வேலனாக தமிழரின் உயிரிலும் உள்ளத்திலும் கலந்து **"மாப்பிளைக்கடவுளாக"** குறிஞ்சிநில குமரனாக விளங்குகிறான் எனலாம்.

இப்பெருமான் என்றும் இளையானாய் எவர்க்கும் மிகப் பெரியனாய் என்றும் அழகியனாய் இருத்தல் போலவே தன் அடியார்களோடு விளையாடி மகிழும் "குழந்தைப்பெருமான்" ஆகவும் இருக்கிறான். பேராதரிக்கும் அடியவர் தம் பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும் பேறும் கொடுக்க வரும் பிள்ளைப் பெருமான் என்னும் பேருடைய முருகன் குழந்தையாகத் சதங்கையும் தண்டையும் ஒலிக்க தளர்நடையிடுவதை

**"தந்தன தந்தன தனத் தந்தன தந்தன தனவென**
**செஞ்சிறு சதங்கை கொஞ்சிட**
**மணித்தண்டைகள் கலின் கலின் கலி**னெனத் திரு**வான**
**சங்கரி மனங்குழைந்துருக முத்தம் தரவரும்**
**செழும் தளர்நடை"**

என்று அருணகிரிப் பெருமான் திருப்புகழில் பதிவு செய்கிறார்.

இத்தகு அழகுக் குழந்தையாகிய முருகவேட் பெருமான் நீங்காதுறையும் அற்புதஸ்தலம் நீர்வேலி கந்தஸ்வாமி தேவஸ்தானம். நெடிதுயர் இராஜகோபுரத்துடன் தலமரமாக கடம்பமரம் விளங்கக் காட்சி தரும் இத்தலத்தே எழுந்தருளியிருந்து பேரருள் வழங்கும் இறைவன் மீது பாடப்பெற்றதே **"நீர்வைக் கந்தன் பிள்ளைத்தமிழ்"** ஆகும். இதனோடு இணைந்ததாய் தாலாட்டு, திருப்புகழ், திருப்பள்ளியெழுச்சி, கீர்த்தனை என்பனவும் வயதிலும் அறிவிலும் சிறியோமாகிய எம்மறிவிற்கேற்ப திருவருட்துணையோடு எம்மால் எழுதப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபு முறை நின்று புதுமைகளை உள்வாங்கி நவீன காலத்திற்கேற்ப சுருக்கமாயும் இலகுநடையிலும் இந்நூல் படைக்கப் பட்டுள்ளது. நீர்வை நகருறையும் நம் தலைவனான முருகன் மீதுண்டான பக்தியின் வெளிப் பாடான இந்நூலின் பொருள் பயன் எண்ணம் யாவும் அவனேயாகும். குமரனின் அடியார்கள் இப்பக்திப்பிரபந்தத்தை உவந்தேற்றுக் கொள் வார்கள் என்பது சிறியோமுடைய எண்ணம். குற்றம் களைந்து குணம் கொள்ள வேண்டுகிறோம்.

"ஸர்வம் ஸுப்ரம்மண்யார்ப்பணம்"

**சிவஸ்ரீ தியாகராஜக் குருக்கள் மயூரகிரி சர்மா**
**நீர்வையூர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடிப் பரவசித் தாடல் வியப்பல்ல!

( காரைநகர் உதவி அரசாங்க அதிபரும் சிறந்த கவிஞருமாகிய **உயர்திரு.த.ஜெயசீலன்** அவர்கள் நீர்வைக்கந்தன் பிள்ளைத்தமிழ் நூலுக்கு வழங்கிய வாழ்த்துக்கவிதை)

அழகு என்றதோர் சொல்லின் பொருளினை
அலகிலா விளையாட்டுடை அண்ணலை
விழும் அடியரைத் தாங்கிடும் நீர்வையூர்
வேலனை நெகிழ்ந் தேற்றிப் பணிந்திடும்
இளம் கவிஞனின் ஆற்றலைக் கண்டுமே...
இறும்பூ தெய்தினோம்! இவனது ஆழுமை
செழிக்க நேர்கிறோம்! என்றும் இவன்பணி
சிறந்து ஓங்க நெஞ்சார நாம் வாழ்த்தினோம்!

ஆறு முகனது அன்பினைப் பெற்றவர்
அவனை நினைந்து நினைந்து உருகியே
பாடிப் பரவசித் தாடல் வியப்பல்ல!
பாலன் மயூரகிரி இன்று பாடினான்
நீர்வை முருகன் பிள்ளைத் தமிழ், மற்றும்
நீர்வைக் கந்தன் திருப்புகழ், தாலாட்டு,
நீர்வையான் திருப்பள்ளி எழுச்சி, ஆம்!
நீடு வாழ்க அன்னானின் புலமையாம்!

மரபின் சந்தம் மறையாக் கவிநடை
மண்ணின் ஈரம் குறையா மொழிநடை
திருத்தலப் பெயர், புராணக் கதை, புதுச்
சிந்தனை இவை திரட்டிச் சுவையூட்டி
பொருள் செறியப் புதிதாய்ப் புனிதநூல்
பூத்தது அதன் வாசத்தை ஊரெலாம்
பரப்பும் காற்றுயான் நீர்வேலிக் கந்தவேற்
பதியின் தேரின் முன் பணிந்து வணங்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் அழகைப் பாடுங்கள்

முருகன் எல்லாப் பொருள்களிலும் நீக்கமற நின்று, அவைகளை அழகு செய்வதை எங்கள் முன்னோர்கள் கண்டு இன்பம் நுகர்ந்தார்கள். அவ்வின்பத்தை இப்பொழுது நாங்கள் நுகர்கிறோமா? இயற்கை முருகன் வடிவாயிருப்பது உங்களுக்குப் புலனாகிறதா? முருகனைக் காண முயல்கிறீர்களா?

முருகன் செந்நெறி ஓம்பினால் அவனைக் காணலாமன்றோ? முருகனுக்கு ஏராளமான கோயில்களிருக்கின்றன அவனோ எங்கும் நிறைந்துள்ளான். அவனுக்கு இனிப் புதிய கோயில்கள் கட்டுதல் வேண்டா அவன் செந்நெறியை வளர்க்கக் கழகங்கள் காணுங்கள் கல்லூரி அமையுங்கள், அறநிலையம் நிறுவுங்கள், திருப்புகழைப் பொருளுணர்ந்து ஓதுங்கள்.

இயற்கையிலுள்ள அவன் அழகை நூல்களாக எழுதுங்கள், பாட்டாகப் பாடுங்கள், முருகன்பெயரால் பிணியை ஓட்ட முயலுங்கள், போலி ஞானம் வேண்டாம், உறுதிக் கொள்கை வளருங்கள், முருகன் திருவருளால் பிணி மூப்பு சாக்காடெனும் கட்டுக்களை அறுத்துக் கொள்ளுங்கள் கொள்ளின இயற்கை மணமும், மாறா இளமையும், அழியா அழகும், கடவுந்தன்மையும் உங்கள் பால் பொலியும் பொலியும்.

இயற்கை அழகும் என்றும் வாழ்க
முருகா! முருகா! முருகா!

மகாவித்துவான்
திருவாரூர். வி. கலியாண சுந்தரனார்,
(முருகன் அல்லது அழகு)
சென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

"நல்லூரிலிருந்த இராசதானியும் பெருங்கோயிலாகிய ஆகிய கந்தசுவாமி கோவிலும் போர்த்துக்கேய வெறியர்களால் கி.பி. 1621ல் தரைமட்டமாக்கப்பட்ட அங்கிருந்த திருக்கோயில் சிலா விக்கிரகங்களை குளமொன்றில் புதைத்து விட்டு கோயில் குருக்கள்மார் நீர்வேலிப் பகுதிக்கு ஓடியதாக "ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (யாழ்ப்பாணச்சரித்திரம், 1933) எழுதியுள்ளார்.

இவ்வாறாக அந்நியர் ஆட்சிக்காலத்தில் சைவத்தின் காவலரணாகத் திகழ்ந்திருக்கிறது நீர்வேலி. இவ்வூரில் முருகன் கடம்பக்கந்தனாக கோயில் கொண்டு தன் அடியார்கள் விரும்பியதை எல்லாம் தந்தருள்கிறான். இப்பெருமானின் திருப்பணிக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த எம் ஞானத்தந்தை ஆகிய சிவஸ்ரீ. சுவாமிநாத இராஜேந்திரக்குரக்களின் பத்தாவது நினைவாண்டாகிய இவ்வாண்டு "நீர்வைக்கந்தன் பிள்ளைத் தமிழ்" வெளியாவது சிறப்பாகும்.

நீர்வேலிக் கந்தசுவாமி மீது பிள்ளைத்தமிழ் பாடி வெளியிடும் ஆவல் இராஜேந்திரக் குருக்களுக்கு அக்காலத்தில் இருந்திருக்கிறது. ஆனால் அது அப்பொழுது நிறைவேறவில்லை தற்போது சிவத்திரு கா. சிவபாலன் அவர்களின் உந்துதலால் நாம் யாழ் பல்கலைக்கழக மாணவனும் தமிழ் ஆன்மீக ஈடுபாடு மிக்க இளையவருமான தி. மயூரகிரிசர்மா அவர்களைத் தூண்டியதன் விளைவாக இப்பணி சிறப்பாக நடந்திருக்கிறது.

இந்நூல் வெளியீட்டிற்கு சிறந்தமுறையில் வாழ்த்துக்கவி தந்து வாழ்த்திய காரைநகர் உதவி அரசாங்க அதிபரும் சிறந்த கவிஞருமாகிய மதிப்பிற்குரிய திரு. த. ஜெயசீலன் அவர்களுக்கும் வெளியீட்டுப்பணிகளில் உதவிய நீர்வைக்கிழார் அவர்களுக்கும் இந்நூலைச் சிறந்த முறையில் அச்சேற்றித் தந்த ஷாம்பவி பதிப்பகத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரியதாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக இந்நூற் பணிகளில் ஈடுபட்ட யாவருக்கும் இறைவன் நீர்வைக் கந்தன் சர்வ மங்கலங்களையும் தந்து தன் மாறா அடியார்களாய் வாழும் பேறும் அருள் அவன் அவன் தாள் பணிகிறோம்.

"திருவடியும், தண்டையும், சிலம்பும், சிலம்பூடுருவப்
பொருவடிவேலும், **கடம்பும்,** தடம்புயம், ஆறிரண்டும்,
மருவடிவான வதனங்கள் ஆறும், மலர்க்கண்களும்,
குருவடிவாய் வந்து என் உள்ளங் குளிரக் குதிகொண்டனவே.
(கந்தரலங்காரம்)"

**சிவஸ்ரீ. இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள்,**
**(தேவஸ்தான பிரதமகுரு)**
**இந்துசமய அபிவிருத்திச் சங்கம் சார்பாக.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வேலி அருள்வளர் கந்தஸ்வாமி தேவஸ்தானம்

| | | |
|---|---|---|
| இறைவன் | – | வல்லி தேவசேனா சமேத கந்தசுவாமி |
| ஆலய தோற்றம் | – | 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் (1852 ற்கு முன்) |
| ஸ்தாபர் | – | கந்தையினார் |
| தலவிருட்சம் | – | கடம்பு (ஆலய கோபுர வாயிலருகில் உள்ளது) |
| தீர்த்தம் | – | ஆலய திருக்குளம் (பழநியாண்டவர் சந்நிதியருகில்) |
| முன்னைய தீர்த்தம் | – | நறுவத்தாழ் குளம் |
| பெருந்திருவிழா | – | சித்திரை மஹோற்சவம் (20 நாட்கள்)<br>ஐப்பசி மஹோற்சவம்<br>(கந்த ஷஷ்டி காலத்தில் கொடியேறி 8 நாட்கள்) |

## தனிச்சிறப்புகள்

01. 1830ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கந்தபுராண படனம் சிறப்பாக ஆண்டுதோறும் நிகழ்கிறது.

02. நீண்ட சிவாச்சாரியப் பாரம்பரியம் இத்தலத்திற்குண்டு 2000ம் ஆண்டில் அமரரான சுவாமிநாத ராஜேந்திரக்குருக்கள் இப்பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்.அன்னார் கந்த புராணத்தை கசடறக்கற்றவர். ஆலய சிறப்பை உலகறிய செய்தவர் இன்றைய ஆலயகுரு இராசேந்திரசுவாமி நாதக் குருக்கள்.

03. கந்தஷஷ்டிக் காலத்தில் இலங்கையிலேயே முதன்முதலாக கொடியேறி யாகம், பலி போன்றவற்றுடன் மஹோற்சவம் இவ்வாலயத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. (இதனை ஆரம்பித்தவர் அமரர். பிரம்மஸ்ரீ. சு. இராஜேந்திரக்குருக்கள்)

04. கந்தபுராணச் செய்திகளை கதை வடிவில் காட்டும் அழகு நிறை இராஜகோபுரமும் பழநிமலையமைப்பு உடைய பழநியாண்டவர் சந்நதியும் கண்ணையும் கருத்தையும் கவர்வன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. ஆலயச் சூழலில் அறநிலையங்கள் நிறைந்துள்ளன. (பாலர் நிலையம், மாதர்சங்கம், சனசமூகநிலையம், அறநெறிப்பாடசாலை, இந்து இளைஞர் சங்கம் எனப் பல)

06. வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன் நீண்டகாலம் தங்கியிருந்து தரிசித்துப் போற்றிய தலம்.

07. விஸ்வரூப தரிசன உற்சவம், மாம்பழத்திருவிழா போன்றவறவை இத்தலத்தில் நிகழும் அழகே தனியானது.

08. இவ்வாலய ஆறுமுகப் பெருமானின் திருவுருவ எழில் இந்தியாவில் கூடி காணவரிது. இராஜமூர்த்தம் என கூறப்படும் இம்மூர்த்தி பக்தர்களை அனுக்கிரகம் செய்யும் பாவனையில் அமைந்துள்ளது.

09. இத்திருத்தல நடராஜ மூர்த்தியின் அழகும் வியக்க வைப்பதாகும்.

10. 1896ஆம் ஆண்டு தொட்டு தர்மகர்த்தாசபை, பரிபாலனசபையால் பரிபாலனம் செயப்படும் யாப்பு முறைப்படி செம்மை நிறை பரிபாலனம் நடப்பதும் சிறப்பு.

11. கி. வா. ஜ. பண்டிதர் நீ. சீ. முருகேசு, கவிமாமணி பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயா போன்றோரால் இத்தலப் பெருமான் பாடப்பட்டுள்ளான்.

12. ஆறுமுகப்பெருமான் எழுந்தருளும் விசேட நாட்களில் " சண்முகவிலாச மண்டபத்திலிருந்து" சிறப்பாக வசந்தமண்டபத்தில் எழுந்தருளல் இவ்வாலயத்தில் தனித்துவமாக நடைபெறுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வை முருகன் பிள்ளைத்தமிழ்

01. காப்புப்பருவம் – பாட்டுடைத் தலைவனான பிள்ளைப்பெருமான் முருகனை சிவன், விஷ்ணு, பிரம்மா, முதலியோர் யாவரும் காக்க வேண்டுவது. இரண்டாம் மாதத்திற்கு உரியது.

02. செங்கீரைப்பருவம் – பொருளறியாமல் ஒலி எழுப்பி ஒரு கால் மடக்கி ஒருகால்நீட்டி தலைநிமிர்த்தி ஆடும்பருவம் ஐந்தாம் மாதத்திற்குரியது.

03. தாலப்பருவம் – தாலாட்டு பாடுவதற்குரிய பருவம் எட்டாம் மாதத்தினது.

04. சப்பாணிப்பருவம் – கையோடு கை தொடட்டி சப்பாணி கொட்டும் பருவம் ஒன்பதாம் மாதத்தினது.

05. முத்தப்பருவம் – குழந்தைக்கு பதினோராம் மாதமாகும் போது முத்தம் கேட்பது.

06. வருகைப்பருவம் – ஒரு வயதுக் குழந்தை தளர்நடையிட்டு வரச் செய்வது.

07. அம்புலிப்பருவம் – குழந்தையுடன் விளையாட சந்திரனை அழைக்கும் பருவம்.

08. சிற்றில்பருவம் – இப்பருவத்தில் மண்ணில் சிறு வீடு கட்டும் சிறுமியர் தலைவனான குழந்தையை அதை சிதைக்க வேண்டாம் என வேண்டுவது இரண்டாம் அகவைப்பருவம்.

09. சிறுபறைப்பருவம் – குழந்தை மூன்றாமாண்டில் சிறுபறை (சிறிய மேளம் / வாசிப்பது/ கொட்டுவது)

10. சிறுதேர்ப்பருவம் – குழந்தையை ஐந்தாவது வயதில் சிறுதேரு ருட்டுமாறு வேண்டுவது.

*ஸ்ரீ குமார ஜெயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வைக் கந்தன் பிள்ளைத்தமிழ்

### விநாயகர் வணக்கம்

நீர்கொண்ட செஞ்சடைப் பிரானார் தந்த
நிறை சுவை மாங்கனி பெற்ற நாதன்
சீர் கொண்ட செங்கண் நாரணனார் மருகன்
சீரணி புனிதரெல்லாம் போற்ற ஒரு கொம்பு
கூர் கொண்டே மாபாரதம் எழுது ஆனைமுக
குலவரகேசரியான் பதம் பணிந்து போற்றி
நீர்கொண்ட ஊர் நிலவு கடம்பக்கந்தன் மீது
நிறையன்புப் பிள்ளைக்கவி பாடுவோமே.

## 01. காப்புப்பருவம்

நிறை நீர்க் கருங்கடல் புரண்டு மூடியதென்ன
நெடியசிறை விரித்தாடும் மயூரமதில் சதுர்
மறையாவும் போற்றவும் அரிதாய் மதிமுகமோடு
மூவுலகும் ஒரு கணமே உலவிடு முருகப்பிள்ளை
குறையின்றி வளரவே அன்னை வைத்தீசனோடும்
கோவிந்தனுடனே அலைமகளும் கலையரசி தன்
இறையான நான்முகனொடும் வந்து காக்க நெடுவேல்
இனியவனாம் எம் குமரனை வந்து காக்க.

காட்டும் கனலெறி சூலமோடு பாசம் கைக்கொண்டு வரு
காலன் கடுக உதைத்த காமதகனக் கடவுள்
ஈட்டிய திருவன்ன கந்தனை வேடுவ வள்ளி மனம்
இழுத்துக் கவர்ந்த பேரழகின் தேவை
வாட்டியே யாவரையும் வதைத்த சூர் தொலைத்த
வள்ளலை வெள்ளை வாரணனொடு தேவரும் மாதரும்
தீட்டேதும் நேராமல் திறமோடு காக்க நன்றே
திருவுடைய நீர்வை நகருறை சேயைக் காக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. செங்கீரைப்பருவம்

ஊறும் அழகு ததும்பு பொன்னரை நாணசைந்தாட
 உவப்புடனே மார்பில் தவளு இரத்தின மாலையுமினிதாட
ஆறுமா முகத்தும் எழும்பு வியர்வையும் அழகுற விளங்கியாட
 ஆறிரு தோளுடன் அழகுத் தொந்தியும் சரிந்து சரிந்தாட
மாறு தவிர்ந்தொளிர் பஞ்சாயுதமொடு பாதம் அணிசெய்
 மணி நாதமொடு சதங்கை கிண்கிணியும் ஒலித்தாட
விறு நலத்துடன் நீர்வையில் வாழ்பவ ஆடுக செங்கீரை
 விண்ணவரும் பணி எங்கள் குழந்தையே ஆடுக செங்கீரை

இந்து ஆயிரம் இணைந்தது போல் முக நண்பா பண்பாளா
 இன்தமிழ் வள்ளியின் செந்தமிழ் விரும்பும் இளையோனே
செந்துவர் வாயுமை தந்த சேவக செந்திலம் பதியானே
 சீரிளமை அழகு சிறந்திட வந்திடும் செவ்வேளே
மந்திர தந்திர யந்திர பூசனை மகிழ்வுற ஏற்றருளி
 மலர்நிறை கடம்பு மிகவுயர் நீர்வை மா நகரினிலே
சுந்தரக்கோலம் காட்டு மருட் சேயே ஆடுக செங்கீரை
 சுகந்தனே சுப்பிரமணியத் தேவனே ஆடுக செங்கீரை.

## 03. தாலப்பருவம்

எண்ணியே நின்னைப் பதித்தவர் மாமல இருளற எழுகதிராய்
 எங்கும் தங்கி நிறைந்து வளர் பொங்கு சுடரொளியே
மண்ணிலே குறவர் மகளெனுமழகு நிறை வள்ளியொடு
 மாவானவன் தரு மகளையும் மணந்த மா மதியே
கண்ணினுக்கு உற்ற இமை போல நம்மில் பரிவு வைத்து
 காத்து அருள் இமராசன் மகள் பெறு காதல் மகவே
விண்ணவர் துயரழி வேந்தனே தாலோ தாலேலோ
 வரம் தரு நீர்வையின் வரதனே தாலோ தாலேலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் ஆதித்தன் அட்டவசுக்களுடன் உருத்திரர்
இமையா விழி அட்டதிக்கார் மருத்துவர்
சந்திரன் வாணியொடு பிரம்மனும் மகாலக்ஷ்மியுடன்
சாரங்கனும் அன்னையுமையாளுடன் சம்புவுடன்
வந்து நினைப்பார்த்து வாயார வாழ்த்தி
வளமார் நல் பூசனையும் செய்து எங்கள்
கந்தா கண் வளர்க என்றே போற்ற
கண்ணே தாலோ தாலேலோ
கவின் நீர்வை அரசே தாலோ தாலேலோ

## 04. சப்பாணிப் பருவம்

கோலக் கருங்குழல் செவ்வாய் சிறுமருங்குல் தேவசேனா
குலவிடும் திருமார்பழகனே சூர் குலமழித்திடு
காலத்திலே கதிர்காமத்தில் படைவீடுக் கொண்டே
கருணையொடு அநுமனுடன் அருணகிரிக்கு மருளிய
நீலச் சிகண்டியில் ஏறி விளையாடுவோய் வள்ளியெனும்
நெடுங்கொடிக் குறத்தி மாணாள, நம் தலைவ
சாலச் சிறப்புடனே தளிர்கரம் சேர்த்துச் சப்பாணி கொட்டியருளே
சரவணனே சாஸ்வதனே சாப்பாணி கொட்டியருளே

பாதி மதியொடு நதியணி சடையார்
பரிவொடு அருளிய ஜோதிப் பரமனே
நீதி நிலைக்க கண்ணனாகி பூமியில்
நிறையடி யசோதையிடம் பெற்றோன் மருகனே
ஆதி அயனுமறியா அற்புத நடனம்
ஆடும் மயிலேறி நீர்வை நகர் வரும்
முதிய கருணை பொதிய வளர்வாய் சப்பாணி கொட்டியருளே
முதல்வ நீர்வை இறைவ முருக சப்பாணி கொட்டியருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. முத்தப்பருவம்

வெண்ணீர் அலை ததும்பும் திருப்பாற்கடல்
வைகும் வைகுண்டன் திருமருக முருக
கண்ணீர் அலை தனில் நின்னடியார்
காலமெல்லாம் அலைதல் முறைதானோ?
விண்ணீர் விழுதலில் வரும் நீர்க்குமிழி போல்
வாழ்விது இறைவ கருணை தந்தே பாவம்
திண்ணமாய் ஒழிய தணிகை நாத தருக முத்தம்
திருவுடை நீர்வை சேயே தருக செம்பவள முத்தமே.

கலங்கி இரங்கிக் கலுழ்ந்து புலர்ந்து
கடையேன் வாட பன்னிரு கண் கடவுளே
துலங்கு வடிவேல் தொட்டும் விடலாமோ?
தூய நான்முறையும் துதிக்கும் தூயோனே
இலங்கு குழலூதி மயக்கும் இனியான்
வெண்ணை திருடும் கண்ணன் மருகனே
மலரும் முகம் காட்டி முத்தந் தருக முத்தமே
முக்தி தரும் நீர்வை முத்தே முத்தம் தருகவே.

## 06. வருகைப் பருவம்

எள்ளும் திறத்து அரக்கர் அழிய வருக தேறுதலில்
எங்கள் உணர்வில் இருந்தினிக்கும் தேனே வருக
தெள்ளு தமிழர் பெறு காமதேவ வருக செம்மொழித்
தமிழ்த் தேவே வருக அருணகிரி இறைவா வருக
உள்ளும் காதலுடை அன்பர் ஆராவமுதே வருக
ஒழியாக் கருணைக் குமரா வருக செம்வடமொழியும்
வள்ளல் குமரவென போற்ற கோவே வருக வருகவே
வயல் நிறை நீர்வை வேந்த வருக வருகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தரு எனும் கற்பகாரண்ய வருக அறிவானந்த
அற்புத கல்யாணமே வருக அருள்வெள்ள வருக
விந்தை காமதேனு வருக கற்பகமே வருக
விளையாடும் நீர்வை நகர் வேந்தனே வருக
சிந்தை நிறை இராச இந்திர வாழ்வே வருக
சீரார் காதல் கடம்பக் கந்தனே வருக
மைந்த வருக மாபிரமனும் அதிசயிக்க வருக
மயூரமலை தனில் வாழும் மதுவே வருக வருகவே.

## 07. அம்புலிப்பருவம்

முழுமதியரசன் என முருகு நிறை மதனனென
முடங்குமொரு குறையிலா முத்தனெனச் சிறப்பிப்பேன்
குழவியுருவானவன் முதற் தமிழ் சங்க புலவனாய்
கூடல்நகர் நின்ற கோமான் மீன் கொடியுடை
வழுதி கூன் நிமிர்த்திய வள்ளல் உனைப் பரிந்து
வா வா என விளையாட அழைக்கின்றான்
அமுதமுது உமைதரு பாலுண்ணுவான் மகிழ அம்புலி ஆடவாவே
ஆறுமுக அருளழகன் மிக மகிழ அம்புலி ஆடவாவே

பொங்குதிரை போலும் பெருவசுர சமுத்திரமும்
பெரிய ஆயிரத்தெட்டு உலகமும் சக்கரவாளகிரியும்
தங்குபெரு சூரன் கிளையொடு தலையும்
தீரமொடு சிதைத்தவன் கொக்கறுத்த மாவீரன்
எங்கும் நிறை வடிவாய் எழில் மாவிஸ்வரூபமும்
எடுத்தவன் இறப்பொடு பிறப்பழிப்பவன் அழைத்தனன்
அங்கை கொண்டுனை பிடிக்க முன் அம்புலி ஆடவாவே
அயிலேந்து நீர்வை ஆண்டவனுடன் அம்புலி ஆடவாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. சிற்றில்பருவம்

மிஞ்சு பொன் தொட்டில் மீதேயிருந்தி தாலாட்டுரைத்து
மிகவும் மகழ சப்பாணி கொட்டி முத்தம் கேட்டு
நெஞ்சு மகிழ நீர்வை நகர் நாதனே வருக என
நிதம் பாடி நிலவழைத்து நின் அடித்திருப்பணியே
கொஞ்சு தமிழில் பாடியாற்றும் நம்மீது பரிவுடனே
கோலக்கால் வீதி வைத்து வரும் குறிஞ்சிக் குமரா
குஞ்சர முகவன் சகோதர நம்முடை சிற்றில் சிதையேலே
கருணாநிதே கடம்பணி தேவா சிற்றில் சிதையேலே

பொங்கும் வங்கக் கடலன்று பொய்யாம் கிரவுஞ்ச மலையன்று
பங்கம் செய்த இராவணன் பள்ளிகொள்ளும் கோட்டை அன்று
சிங்கவசுரன் நகரன்று சீரழி மகேந்திர புரமன்று
சீறி சூரனுடை மாயங்களுமன்று மாவுமன்று
மங்காப் பிறவித் துயரன்று மாமலப் பெரு நிலையன்று
மாதவரும் பிடித்திட ஏங்கு சலங்கை கொஞ்சும்
சங்கம் ஒலி சிறுவடிவால் நம் சிற்றில்சிதையேயே
சீரார் நீர்வைப் பதிவாழ்வே அடியேன் சிற்றில் சிதையேலே.

## 09. சிறுபறைப்பருவம்

பரங்கிரியும் பொங்கு திரை செந்திலும் பழநியும்
பார் புகழ் ஏரகம் தணிகையொடு சோலைமலை
சீரார் கதிர்காமம் மாவை நல்லை சந்நதியும்
சீர் கந்தவனம் இணுவை கோவையும் மயிலணியும்
வரணி உசன் மண்டூர் வெருகல் எனப்பல தலம்
விரும்பி உறைந்து தமிழ் கேட்கும் திருச்செவியனே
நாரார் புலமை அருணகிரி தலைவா கொட்டுக சிறுபறையே
நலமார் நீர்வை நாயகனே கொட்டுக சிறுபறையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரும்பு வில்லுடையவள் மலர்க்கணை கொண்டவள்
கவினுற அங்குச பாசம் கரமதில் வைத்தவள்
கருணையின் வடிவவள் கபாலீசன் மகிழ்ந்திடவே
காதலில் அணைத்தவள் காமாட்சிப் பேருடையாள்
திருச்சடை மிசை மதி சூடுவாள் படைத்தலைத்
தருமகத் தொலியினால் ஆற்றுவாள் தருமழகுக்
குருநாத கச்சி குமரக் குழந்தையே கொட்டுக சிறுபறையே
குவலயத் துயரெலாம் ஓடவோட நீ கொட்டுக சிறுபறையே.

## 10. சிறு தேர்ப்பருவம்

பாரோடு விண்ணினும் பரவியே எங்குமுள
பஞ்சமொடு பழி பாவம் ஓடஓட
சூரோடு கயவரோட துயரோட தமிழரை
சூழ்ந்த வினை யாவும் ஓட ஓட
சீரோடு மாதவரும் ஆடவரும் அறம்
சிறக்கவே இனிது வாழ என்றே
தேரோடு நீர்வை தேவே சிறு தேருருட்டியருளே
தெய்வீக அழகு ததும்ப சிறு தேர் உருட்டியருளே.

மங்கல தேவசேனாவும் மகாவல்லி தேவியும் வாழ
மாமயில் வாழ மகிழ்ந்தொலி குக்குடம் வாழ
பொங்கு ஒளி வேல் வாழ ஆறுமாமுகமும் வாழ
புராணத்துயர் காந்தம் வாழ பக்தர் வாழ
தங்கு அருணகிரி புகழ் எங்கும் வாழ அந்தணர் வாழ
தரணியில் அன்பும் அறனும் வாழ நீர்வை வாழ
தங்கத் தமிழ்த் தலைவா சிறுதேர் உருட்டியருளே
தமிழார் நீர்வை செய் தவமே சிறுதேர் உருட்டியருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வைக் கந்தன் பிள்ளைத்தமிழ் குறிப்பிடும் முருகன் திருத்தலங்கள் (21)

நீர்வேலி, கதிர்காமம், திருத்தணிகை, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, திருவேரகம், பழமுதிர்ச்சோலை, மயூரமலை (குன்றக்குடி), நல்லூர், மாவிட்டபுரம் (மாவை), செல்வச்சந்நதி, கோவை, மயிலணி, இணுவில், காஞ்சி குமரகோட்டம், மண்டூர், வெருகல், அருணகிரி (திருவண்ணாமலை), உசன், வரணி (சாவலப்பிட்டி), கந்தவனப்பதி,

# கூறப்பட்டுள்ள முக்கிய கந்தபுராணக் கதைகள்

காமதகனம், காலன்வதை, (மார்க்கண்டேயன் கதை), தந்தைக்கு பிரணவ உபதேசம், கிரவுஞ்சமலை அழித்தமை, சிங்கமுகாசுரன் வதை, மகேந்திரபுரம் அழித்தமை, விஸ்வரூபம் காட்டியமை, சக்கரவாளகிரி மாயங்கள் அழித்தமை, சூரன்வதை, மாமரம் வேல் கொண்டு அழித்தமை, தேவசேனாமணம், வள்ளி கல்யாணம், கதிர்காமத்தில் படைவீடமைத்தமை. (ஏமகூடப்படலம்)

**தவிர**

மாம்பழக்கதை, தமிழ்சங்கப் புலவனானமை, திருஞானசம்பந்தர் பாண்டியனின் கூன் நிமிர்த்தியமை, கண்ணனின் குறும்புகள், விநாயகர் மாபாரதம் எழுதியமை, இராமாவதாரம், அருணகிரி நாதருக்கருளியமை, அநுமனுக்கு கதிர்காமத்தில் உதவியை (சீதையை காண) முதலிய பல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வைக் கந்தன் தாலாட்டு

சோதி மணிப் பெட்டகமோ
நீர்வை நகர்ச் சுடரொளியோ
பாதி மதியணி பரன் சேயோ
பார் புகழ் கடம்பக் கந்தனோ 01

நீலமயில் வாகனனோ
நெடிய வேல் உடையவனோ
கோலக் குறத்தி மணாளனோ
மதனனோ முருகனோ மன்னனோ 02

ஆறிரு தோளனோ
ஆறுமாமுகத்தழகனோ
வீறு பன்னிரு விழியனோ
விண் வாழ்த்து தமிழிறைவனோ 03

ஆறு படைவீடுடையானோ
அன்னை உமை பாலகனோ
தேறு மறை போற்றும்
சிறு சதங்கைப் பாதனோ 04

தணிகைத் தயாளனோ
தந்தைக்குகுருவானவனோ
பணிவோர் வினையறுக்கும்
பரங்குன்றின் நாயகனோ 05

பல்லாண்டு பல்லாண்டாய்
போரினால்பாழ்பட்டு
எல்லாமிழந்த இலங்கை
தமிழரை வாழ வைப்பவனோ 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைப் போல் செல்வனை
உலகத்தில் கண்டதில்லை
என்னைப் போல் ஏஜழயை நீ
எங்கேனும் கண்டதுண்டோ 07

மாணிக்கத் தொட்டிலுக்கு
வாய்க்காத மகிமையெல்லாம்
ஆநிரைத் தொட்டிலுக்கு
தந்தவனின்மருகனன்றோ 08

செஞ்சதங்கை கொஞ்சும்
சிறு கிண் கிணி ஆடும்
கஞ்ச மலர்ப் பாதம்
நீர்வையில் பதித்தவனோ 09

பாலோ பழமோ செந்தேனா
செந்திணையோ அமுதமோ
மேலோர் புகழ் நீர்வையரசனோ
மயிலேறும் மாணிக்கமோ 10

என்றென்று தாலாட்ட
எல்லோர்க்கும் வாழ்வருளி
நன்றே அருள் செய்
நீர்வையுறை தமிழ்த் தெய்வமே 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வைக் கந்தன் திருப்பள்ளியெழுச்சி

அருணன் குணதிசை உதயம் செய்தான்
அகன்றது மும்மலப் பேரிருள் எங்கும்
திருமலி தாமரை முதலாம் மலர்கள்
தரணி எங்குமே நறுமணமுடன் மலர்ந்தன
கருணையின் உருவென நீர்வையில்
கடம்பக் கந்தனாய் விளங்கியே என்றும்
அருளொளி வீசும் ஆறுமாமுகத்து
ஆண்டவனே பள்ளி எழுந்தருளாயே.

ஆடும் மயிலது தோகை விரித்தாட
அதனிடை அருளொளியாய் நீ எழுந்தருளி
கூடும் அன்பில் கும்பிடும் அடியரை
காத்திட வருதல் போல் கதிரவன்
பீடுடை ரதமேறி எழுந்திட்டான்
பெருமை மிகு நீர்வை இளையோனே
ஏடுடை மலரோனும் ஏத்தும் எம்
ஆண்டவனே பள்ளி எழுந்தருளாயே.

கின்னரர் கிம்புருஷருடன் சித்தர்
கந்தர்வர் தேவர் முனிவர் யாவரும்
மன்னிய முரசு முழங்கு கோபுர
மங்கல வாயில் வந்து பணிகின்றார்
பொன்னில மகளும் இந்நில மகளும்
போற்றும் நீர்வைப் பேரருளாளனே
கன்னல் தமிழ் விரும்பும் கந்த
ஆண்டவனே பள்ளி எழுந்தருளாயே.

சங்கமொடு வீணை வேணு மிருதங்கம்
சிறப்புறு வயலின் மத்தளம் நாதஸ்வரம்
எங்குமே முழங்கி இசை பரப்பி
இன்தமிழ் இறைவ உனையழைத்தது
பொங்கும் கருணையொடு கவினுடை
புகழுறு நீர்வையின் பெருமானே
எங்களை ஆண்டு கொண்டருளிடும்
ஆண்டவனே பள்ளி எழுந்தருளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வைக் கந்தன் திருப்புகழ்

நீடு கொடியாட நெடிய வேலாட
நிவந்த குடையாட - முழங்கியதிர்

கோடு துடியாட கொட்டு முழவாட
கோல மயிலாட - சிலம்பையொலி

ஆடு பதமாட ஆறுமுகமாட
ஆறு புயமாட - அருளோடும்

தேடு மறையாட தெய்வத் தமிழாட
திருநீர்வை அருளாடும் - பெருமானே.

# நீர்வை முருகன் கல்யாணக்காட்சி

ராகம் - கல்யாணவஸந்தம் தாளம் - ஆதி

## பல்லவி

பொங்கிடும் மங்கலக் காட்சி - முருகன்
மங்கல நாண் மாவல்லிக்குச் சூட்டிடும்

(பொங்கிடும்)

## அநுபல்லவி

திங்கள் முகத் தேவி தளிர் கரம் பற்றி குகன்
அங்கவளோடு இணையும் அழகுறு திருக்காட்சி

(பொங்கிடும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சரணம்

ஓமப் புகை நடுவே ஓரக்கண்ணால் பார்த்து
        தூமறை நாயகனும் குறவர்தம் கொடியும்
பூமகள் மகிழ இணைகிறார் மாதரெலாம்
        போற்றியே பரவி துதி பாடுகிறாரே

(பொங்கிடும்)

அஞ்சலென அருளும் நீர்வை ஆண்டவன்
        அழகு மங்கை வல்லி அணங்கவள் விழிகள் சேர
நெஞ்சம் நெகிழ்ந்து நீர்வையுராரெலாம் வாழ
        நாளும் அருள் செய்யும் ஸ்கந்தன் கல்யாணம்

(பொங்கிடும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை உரை

நீர்வேலி நீர்வளத்தினாலும் நிலவளத்தினாலும் சிறப்புப்பெற்றது. வலிகாமம் கிழக்கில் நீர்வேலி பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டது. மேலும் கோவில்களாலும் அறிஞர் பெருமக்களாலும் பெரும்புகழைத் தேடியது நீர்வேலிப்பதி ஆகும். நீர்வேலி சிவசங்கர பண்டிதர் ஒரு ஞானசூரியன்.

நீர்வேலிக் கந்தன் கலியுகத்தில் ஒரு அற்புதமான தெய்வம். பெருவணக்கத்திற்குரிய சிவஸ்ரீ. சு. இராஜேந்திரக்குருக்கள் ஐயா நீர்வைக்கந்தனை முப்போதும் திருமேனி தீண்டி ஆலயத்தை திரிகரண சுத்தியுடன் நன்கு பரிபாலித்தவர். அவருக்கு பின் முருகப்பெருமானின் பெரும்பணியை ஆற்றி வருபவர் சிவஸ்ரீ. இரஜேந்திர சுவாமிநாதக் குருக்கள் என்றால் மிகையாகாது.

நீர்வை மணி சிவஸ்ரீ. கு. தியாகராஜக்குருக்கள் நுண்மான் நுழைபுலம் வாய்க்கப்பெற்ற அந்தண சிரேஷ்டர். அவர்களின் திருமகனார் பிரம்மஸ்ரீ. தி.மயூரகிரி ஐயா நீர்வைக்கந்தன் மீது பிள்ளைத்தமிழ் மிகவும் அருமையாகப் பாடி முருகப்பெருமானுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார்.

திருச்செந்தூர் முருகன் மீது குமரகுருபரசுவாமிகள் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். இங்கு அறிவுலகில் சஞ்சாரம் செய்யும் பிரம்மஸ்ரீ. தி. மயூரகிரி ஐயா முருகனுக்கு பிள்ளைத்தமிழ் பாடிய ஞானக்குழந்தையாக விளங்குகிறார்.

மஹாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை பல பிள்ளைத்தமிழ்களைப் பாடியுள்ளார். சேக்கிழார் பிள்ளைத்தமிழ் அவைகளிற் சிறந்ததென அறிஞர்களால் பெரிதும் பாராட்டப்படுகிறது. எனவே நீர்வேலி கந்தப்பெருமான் மீது பிள்ளைத்தமிழ் பாடிய ஞானக்குழந்தை தி. மயூரகிரி ஐயாவின் பெரும் பணி சிறக்க நீர்வெலிக் கடம்பக் கந்தப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.

சிவத்திரு. கா. சிவபாலன்
உதவி ஆசிரியர்
அருள் ஒளி
தெல்லிப்பளை துர்க்கையம்பாள் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீர்வைக் கந்தன் பிள்ளைத்தமிழ்

ஷாம்பவி பதிப்பகம்,
276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: நீர்வேலி.
தொலைபேசி: 021 2224143, 077 6184425.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org